# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.10/2024 and 11/2024
Sessions)

( Prosecution P.W.1 - T.S.Sajin
Deposition of witness for (Defence
(Court

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 12th day of September 2025.

**குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை என்றும் நான் சொன்ன நேரத்தில் ஆய்வு அறிக்கை சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சாட்சிகள் எதிரியின் நிறுவனத்தில் பணி செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பந்தமில்லாத நபர்களை சாட்சிகளாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சியாக வாக்குமூலம் கொடுத்த நபர்கள் உண்மையான நபர்கள் இல்லை என்றால் சரியல்ல. நானாகவே தெரிந்த நபர்களை கையெழுத்து பெற்றுக்கொண்டு அறிக்கை தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர்கள் எதிரியின் நிறுவனத்தில் பணி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர்கள் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. மின் கசிவு ஏற்பட்டதை காட்டுவதற்கு அதற்கான அதிகாரிகளை வரச்சொல்லி பார்வையிட்டு அறிக்கை எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்கான ஆய்வு செய்யும் அதிகாரம் துணை இயக்குநர் (BOCW) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆய்வு செய்தோம். விபத்து நடந்த பிறகுதான் ஆய்வு மேற்கொண்டோம். விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. நேரடி விசாரணையின் மூலமாகத்தான் தெரிந்துக்கொண்டோம். நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மின் கசிவு இருந்ததை நிரூபிப்பதற்கு மின் வாரிய அலுவலர்கள் பார்வையிட்டு ஆய்வு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் மரம் வெட்டுவதற்காக உட்கட்டிங் இயந்திரத்தில் ஒயர் பிரிந்து உடனடியாக மின் கசிவு ஏற்பட்டுவிட்டது. இறந்த நபரின் பிரேத பரிசோதனை அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரேத பரிசோதனை அறிக்கையில் இறப்பிற்கான காரணம் கோரப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்த

நபர்களின் புகைப்படம் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நிறுவனத்தை ஆய்வு செய்வதற்கு முன்னர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இசைவாணை இயந்திர கதியில் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு என்று தனியாக இசைவாணை வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. இறுதி அறிக்கை காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 12th day of September 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**